Scholarship Section

# ஆதிதிராவிடர் நலத்துறை

அனுப்புநர்
திரு.ச.முனியநாதன்.இ.ஆ.ப.,
ஆணையர்,
ஆதிதிராவிடர் நலத்துறை,
சென்னை -05.

பெறுநர்
முதல்வர்,
இணைப்பில் கண்டுள்ளபடி,

ந.க.எண் உ3/ 24994/2019 நாள். 26.12.2020

அய்யா /அம்மையீர்,

பொருள்: கல்வி – ஊக்கத்தொகை – 2020-2021ஆம் கல்வியாண்டு – முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ/ மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல் – தொடர்பாக

பார்வை: 1. அரசாணை நிலை எண் 71 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 3) துறை நாள் 07.10.2013

2. அரசாணை நிலை எண் 5 ஆதிதிராவிடர் / பழங்குடியினர் நலத் (ஆதிந 3) துறை நாள் 29.01.2014

3. அரசாணை (நிலை) எண் 58 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந3) துறை நாள் 21.09.2017

-------

பார்வை 1, 2 மற்றும் 3–ல் காணும் அரசாணைகளின்படி, 2020-2021ஆம் கல்வியாண்டில் முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ / மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்க **20.12.2020 முதல் 01.02.2021** அன்று மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

அனைத்து மாணாக்கர்களும் திட்டம் தொடர்பான விதிமுறைகளை அறிந்து கொள்ளவும் விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கி, கல்வி ஊக்கத் தொகை வேண்டி விண்ணப்பிக்க ஏதுவாக இத்திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் மாதிரி விண்ணப்ப படிவம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கான அரசு இணைய தளத்தில் ("www.tn.gov.in/forms/deptname/1") வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் 01.02.2021ஆம் தேதிக்கு பின்னர் இவ்வலுவலகத்திற்கு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனவும், **ஊக்கத் தொகைக்கான விண்ணப்பப் படிவத்தில் ஏதேனும் ஒரு கலம் பூர்த்தி செய்யப்படாமல் விடுபட்டிருந்தாலும், இதர சான்றுகள் ஏதேனும் இணைக்காமல் விடுபட்டிருந்தாலும், பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது** (விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும்) எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதனால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு இவ்வலுவலகம் பொறுப்பல்ல எனவும் தெரிவிக்கப்படுகிறது.

FOR SCHOLARSHIP RELATED QUERIES, CONTACT: 0431 2503083

EMAIL : scholarship@nitt.edu